KTEJ 2026 03 (1): 54 - 74

Kolumpu Tamil E-Journal (KTEJ)

Volume 03, Issue I, 2026

# சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் இஸ்லாமிய யுத்த தர்மங்களும்: ஓர் ஒப்பீட்டாய்வு

# International Humanitarian Laws and Islamic Laws of War: A Comparative Analysis

[1]எஸ்.எம். பயாஸ், [2]எம். இபாதுர் ரஹ்மான், [3]எம்.ஏ.எப். அதீபா, [4]எப். பனீகா

[1,2,3,4] இஸ்லாமிய கற்கைகள் துறை, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

smfayas@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

உலகளவில் யுத்தங்களும் யுத்தங்களினாலான உயிர், உடமைச் சேதங்களும் அதிகரித்து வரும் காலப்பகுதியாக இந்த நூற்றாண்டினைக் குறிப்பிட முடியும். வேறு வார்த்தைகளில் யுத்தங்களுக்காக ஆயுத உற்பத்தி என்பதை விட ஆயுத உற்பத்திக்காக யுத்தங்கள் என்றளவில் நவீன உலக சூழமைவு பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது எனலாம். அந்த வகையில் குறித்த யுத்தங்களின் போது பொதுமக்கள் மற்றும் நேரடியாக யுத்தத்தில் பங்கேற்காத ஏனைய தரப்பினரின் அடிப்படை உரிமைகளைப் பேணவும் யுத்தங்களில் பங்கேற்கும் தரப்பினரின் பாதுகாப்பை உறுதி செய்யவும் என பல்வேறு ஒழுக்க விதிகளை சர்வதேச ரீதியாகவும் முழுமையான வாழ்வியல் வழிகாட்டி என்ற வகையில் இஸ்லாமிய சிந்தனைகளும் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இரு சட்ட முறைமைகளிலும் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான போர் ஒழுக்க விதிகளை ஒப்பீடு செய்து முன்வைப்பதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். முதலாம் நிலைத் தரவுகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளையும் (Primary Data & Secondary Data) அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பண்பு ரீதியான இவ்வாய்வுக்கு, திரட்டப்பட்ட தரவுகள் அனைத்தும் ஒப்பீட்டு பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விவரண ரீதியாக ஆய்வு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் போர் தொடர்பான இஸ்லாமிய ஒழுக்கங்கள் ஆகியன, கோட்பாட்டு ரீதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இணங்கிச் செல்கின்ற போதும் நடைமுறையில் அவற்றின் பிரயோகம் கேள்விக்கிடமானது என்பதே ஆய்வின் பிரதான கண்டறிதலாகும்.

**திறவுச் சொற்கள்:-** *சர்வதேச மனிதாபிமானச் சட்டம், யுத்தங்கள், இஸ்லாமிய போர் ஒழுக்க விதிகள்*

## Abstract

This century can be characterized as a period marked by a significant increase in wars and the consequent loss of life and destruction of property. In other words, the modern global context reflects a paradigm shift from the notion of producing weapons for wars to engaging in wars for the purpose of weapon production. In this context, both international regulations and Islamic ethical frameworks provide comprehensive guidance intended to protect the basic rights of civilians and non-combatants during conflicts, as well as ensure the safety of those participating in warfare. The primary aim of this study is to conduct a comparative analysis of the theoretical and practical principles of warfare ethics as outlined in both legal systems. This qualitative research is based on both primary and secondary data sources. All collected data have been analyzed using a comparative analytical method, and the findings are presented descriptively. Although the principles of international humanitarian law and Islamic ethics of warfare align in many theoretical aspects, the research identifies that the practical implementation of these principles remains questionable.


**Keywords:** *International Humanitarian Law, Warfare, Islamic Ethics of War*

## 1. ஆய்வு அறிமுகம்

யுத்தத்தின் போது மனிதாபிமானத்தைக் கருத்தில் கொண்டு போர் நடத்தும் விதிமுறைகள் குறித்து உலகம் முழுவதும் பல்வேறு சட்டங்கள் நிலவுகின்றன. இதில் முக்கியமானவை சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் (International Humanitarian Law - IHL) மற்றும் இஸ்லாமிய யுத்த தர்மங்கள் (Islamic Laws of War) ஆகும். இவை இரண்டும் போரின்போது மனிதர்களின் உயிர், பண்பாடு, மற்றும் சொத்துகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் என்பது ஜெனீவா ஒப்பந்தங்கள் (Geneva Conventions), அத்துடன் தொடர்புடைய குற்றவியல் சட்டங்கள், மற்றும் பிற சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டங்களின் வரிசையாகும். இது முக்கியமாக பொதுமக்கள், சிறையிலிருக்கும் வீரர்கள், மற்றும் போரில் நேரடியாக ஈடுபடாதவர்களை பாதுகாக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது சர்வதேச மனிதாபிமானச் சட்டம் போர் அல்லது ஆயுத மோதலின் போது மனிதர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் மரியாதையை பாதுகாக்கும் சட்டங்களின் தொகுப்பு ஆகும். இந்த சட்டம் போரின்போது பொதுமக்கள், போர்க் கைதிகள் மற்றும் சமூக-பொருளாதார கட்டமைப்புகளை பாதுகாக்கின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் முக்கிய கோட்பாடுகளும் விதிமுறைகளும் ஜெனீவா ஒப்பந்தங்கள் மற்றும் அதன் மேலோட்டக் கொள்கைகள் (Protocols) மூலம் வரையறுக்கப்பட்டுள்ளன (International Committee of the Red Cross [ICRC], 2014). இந்த வகையில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் தொடர்பாக அறிஞர்கள் பலர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

மனிதாபிமான சட்டம் என்பது ஒரு நாட்டின் உள்நாட்டு சட்டங்களை தாண்டி, போரின்போது மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளை நிலைநாட்டும் சர்வதேச சட்டமாகும் (Palten, 2004). அதேபோல் டைய்டர் எனும் அறிஞர் "சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பது ஆயுதமிகுந்த மோதல்களில் மனிதருக்கு ஏற்படும் துன்பங்களை குறைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள சட்ட வழிமுறைகளின் தொகுப்பாகும்" என்று விளக்குகிறார் (Fleck, 2013). வெர்னர் என்பவர் "சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பது போர் நிலைகளில் மனிதர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்க, உலகநிலையிலும் பல்வேறு நாடுகளின் கூட்டமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் தொகுப்பாக இருக்கின்றது" எனக் குறிப்பிடும் அதேவேளை (Soeyer, 2019) ஜான் பிக்டே என்பவர் "மனிதாபிமான சட்டம் என்பது மனிதனின் துன்பங்களை குறைக்கவும், போரின் விளைவுகளை நிவர்த்தி செய்யவும் உருவாக்கப்பட்ட சட்டமாகும்" எனக் குறிப்பிடுகிறார் (Picter, 1985).

சர்வதேச மனிதாபிமான சட்டம், குறிப்பாக, மனிதாபிமான அடிப்படைகளையும் போர் நிலைகளின் போது பாதுகாப்பையும் சுட்டிக்காட்டி, போரின் நிலைகளில் மக்கள் மத்தியில் அநீதிகளை தடுக்கும் முயற்சியாக முக்கியமான பாதிப்பை உண்டாக்குகிறது. இவ்வாறு மனிதாபிமான சட்டம் தொடர்பாக நோக்க முடியும். மறுபுறம், இஸ்லாமிய யுத்த தர்மங்கள் என்பது அல்குர்ஆன்[1], ஹதீஸ்கள்[2], மற்றும் இஜ்மா[3] (அறிஞர்களின் அனுமதி) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. இஸ்லாமிய போர் சட்டங்கள் நேர்மையான போர் (Jihad) நடத்துவதற்கான

---

[1] அல்குர்ஆன் என்பது இஸ்லாமியர்களின் புனிதமான, முதன்மையான நூல் ஆகும்; இது Allah (God) (இறைவன்) ஜிப்ரீல் எனும் வானவர் மூலம் இறுதி இறைத்தூதரான நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு 23 வருடங்களாக அருளிய அறிவுரைகள், சட்டங்கள், வழிபாடுகள், வாழ்க்கை நெறிகள் ஆகியவற்றின் தொகுப்பாகும்.

[2] ஹதீஸ் என்பது இஸ்லாமிய இறைத்தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் மற்றும் வாழ்க்கை முறையைக் குறிக்கும் ஒரு தொகுப்பாகும், இது அல்குர்ஆனுக்கு அடுத்தபடியாக இஸ்லாமிய சட்டத்திற்கும் வழிகாட்டுதலுக்கும் ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

[3] இஜ்மா என்பது இஸ்லாமிய சட்டத்தில் (ஷரீஆ) அல்குர்ஆன் மற்றும் சுன்னாவிற்கு அடுத்தபடியாக, நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் அனைத்து இஸ்லாமிய அறிஞர்களும் (முஜ்தஹித்) ஒருமித்த கருத்துக்கு வருவது ஆகும்.

நெறிமுறைகளை விளக்குகின்றன. இதில், குற்றமற்ற பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள், மதத் தலைமைகள், மற்றும் இயற்கை வளங்களை அழிக்கக்கூடாது என்பதுபோன்ற முக்கிய வழிகாட்டுதல்கள் உள்ளன. இஸ்லாமிய யுத்த தர்மம் (Islamic Just War Theory) தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இஸ்லாத்தில் யுத்தம் குறிப்பாக சில கட்டுப்பாடுகளுடனும் நியாயமான காரணங்களுடனும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே அறிஞர்கள் விளக்குகின்றனர். மூல ஆவணமான அல்குர்ஆன்,

"உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள் ஆனால் வரம்பு மீறாதீர்கள் நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை" (அல்குர்ஆன், 2:190). என யுத்த தர்மங்கள் தொடர்பில் விளக்குவதைக் காண முடியும். நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வழிகாட்டல்களும், அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வின் திருநாமத்துடன் புறப்படுங்கள் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்து, அல்லாஹ்வின் தூதரின் மார்க்கத்தை உறுதியாகப் பற்றிப் பிடியுங்கள். முதியவர்களையோ, கைக்குழந்தைகளையோ, சிறு குழந்தைகளையோ, பெண்களையோ கொல்லாதீர்கள். போர்ச் செல்வத்தில் மோசடி செய்யாதீர்கள். உங்கள் போர்ச் செல்வத்தை ஒழுங்காகச் சேகரித்துக் கொள்ளுங்கள். நன்மை செய்து, நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில், அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கிறான்" (Sunan Abi Dawud, Book 15: Hadith 2614). என்றவாறே அமைந்திருக்கின்றன.

இமாம் ஷாஃபி (றஹ்) அவர்கள் "யுத்தம் ஒரு இறுதி தீர்வாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், போரில் குற்றமற்றவர்களை (பெண்கள், குழந்தைகள், மதகுருக்கள்) தாக்குவது தடைசெய்யப்பட்டுள்ளது." (Al-Shafi'I, 2011) எனக் குறிப்பிடுவதுடன், இமாம் இப்னு கையூம் அவர்கள் "முஸ்லிம்கள் யுத்தம் செய்ய வேண்டிய சூழ்நிலைகள் நியாயமானவையாக இருக்க வேண்டும், முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துவதற்காக அல்ல, நீதியை நிலைநாட்டவும் துன்புறுத்தப்படுபவர்களை பாதுகாக்கவும் போராட வேண்டும்"(Ibn Qayyim al-Jawziyya, 2010) எனவும் போர் விதிகள் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதேபோல் இமாம் கஸ்ஸாலியைப் பொறுத்தவரை "யுத்தம் நடத்தும் விதிமுறைகள் நியாயமான முறையில் இருக்க வேண்டும், பகைவர்களை துன்புறுத்தும் நோக்கத்தில் அல்ல, பாதுகாப்பு மற்றும் நீதிக்காக மட்டுமே போராட வேண்டும்" (Al-Ghazali, 2008) எனக் குறிப்பிடுவதுடன், "ஒரு சமூகத்திற்கோ, மதத்திற்கோ எதிராக அல்ல நியாயம் நிலைநாட்ட மட்டுமே யுத்தம் அங்கீகரிக்கப்படுகிறது, அரசியல் அல்லது தனிப்பட்ட இலாபத்திற்காக யுத்தம் செய்யக்கூடாது" (Ibn Taymiyyah, 2001) என இமாம் இப்னு தைமிய்யாவும் போருக்கு உரிய விதிகளை இஸ்லாத்தின் பார்வையில் நின்று விளக்கம் அளித்துள்ளார்.

இவ்வாறு, யுத்தத்தினை இஸ்லாமிய யுத்த தர்மம் பொதுவாக தற்காப்பு, அடக்குமுறையிலிருந்து விடுபடுதல், அநியாயத்திற்கு எதிராக போராடுதல் என்பவற்றுக்காக மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. இதில் பெண்கள், குழந்தைகள், மதகுருக்கள் போன்றவர்களை குறிவைக்கக் கூடாது என்பது பெரும்பான்மை இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றாகவும் உள்ளது. இவ்வாறு, சர்வதேச ரீதியாகவும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஆன்லைன் அடிப்படையிலும் வித்தியாசமான முறைமைகள் மற்றும் மூலாதார அடிப்படைகளில் நின்று வெளிப்படுத்தப்பட்டுள்ள யுத்த தர்மங்களை ஒப்பீடு செய்வதனயே இந்த ஆய்வானது மேற்கொள்கிறது.

### 1.1. ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

அதிகரித்து வரும் போர்ச் சூழல் காரணமாக யுத்தக் குற்றங்களும் சாதாரணமான வகையில் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்வாறான சூழமைவில் யுத்தங்களின் போது, யுத்தத்தில் ஈடுபடும் போது, பின்பற்ற வேண்டிய நியதிகளைக் கடைப்பிடிக்கும் போது யுத்தக் குற்றங்களை இழிவளவாக்கிக் கொள்ள முடியும். இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டே சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் இஸ்லாமிய யுத்த தர்மங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள யுத்த தர்மங்கள் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

### 1.2. ஆய்வு நோக்கம்

மேற்கூறிய அறிமுகத்தின் அடிப்படையில் இவ்வாய்வானது,

- சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் இஸ்லாமிய யுத்த தர்மங்கள் ஆகியன கொண்டுள்ள போர் விதிமுறைகள் தொடர்பாக ஒப்பிட்டு ஆராய்தல்.

## 2. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு, மனிதாபிமானச் சட்டம் தொடர்பில் சர்வதேச சட்டக் கட்டமைப்புகளுக்கும் இஸ்லாமிய யுத்த தர்மங்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை ஆராயும் நோக்குடன் அமைந்துள்ள ஒரு பண்புரீதியான (Qualitative) ஒப்பீட்டு ஆய்வாகும். ஆய்விற்கான தரவுகள் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டுள்ளன. முதன்மை ஆதாரங்களாக அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் போன்ற இஸ்லாமிய மூலாதாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை ஆதாரங்களாக சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை விளக்கும் நூல்கள், அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சட்டக் கொள்கைகள் தொடர்பான அகாடமிக் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, இஸ்லாமிய யுத்த நெறிகள் மற்றும் தர்மங்களை விளக்கும் பாரம்பரிய மற்றும் சமகால இஸ்லாமிய சிந்தனையாளர்களின் எழுத்துக்களும் ஆய்வுக்குள் உட்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் ஒப்பீட்டு முறைமையின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, விவரண அணுகுமுறையில் ஆய்வு முடிவுகள் தெளிவாகவும் முறையான வடிவிலும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 3. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

உலக வரலாற்றின் யுத்தங்கள் நிறைந்த காலப்பகுதியாக 20 ஆம் மற்றும் 21 ஆம் நூற்றாண்டுகளினை அடையாளப்படுத்த முடியும். இரு உலகமகா யுத்தங்கள் உட்பட தேசிய விடுதலைப் போராட்டங்கள், உள்நாட்டு யுத்தங்கள் என்று பில்லியன் கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். யுத்த நடவடிக்கைகள் என்று வரும் போது அங்கே இடம்பெறும் மனித அத்துமீறல்களை குறைத்துக் கொள்வதற்காகவும் அதன்வழியே குறைந்த பட்சமேனும் மனிதாபிமான நலன் காப்பதற்குமென்று யுத்த தர்மங்கள் என்ற யுத்த ஒழுக்கவியல் தொடர்பான கோட்பாடுகளும் நடைமுறைகளும் சர்வதேச ரீதியில் அமுலில் உள்ளன. அவ்வகையில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் (IHL) என்பது ஆயுதப் போராட்டங்களின் போது அல்லது யுத்த நடவடிக்கைகளின் போது இடம்பெறக்கூடிய உயிர், உடமைகளின் மீதான அத்துமீறல்களை இழிவளவாக்கிக் கொள்வதற்கான நெறிமுறைகளின் தொகுப்பாகும் (International Committee of the Red Cross, 1949). யுத்தச் செயன்முறைகளுக்கான சட்டக்கோவை அல்லது ஆயுதப் போராட்டங்களுக்கான விதிகள் எனப் பல பெயர்களிலும் அழைக்கப்படும் இந்த சட்டத் தொகுப்புக்கள், ஒரு தேசிய அரசினால் மற்றுமொரு அரசுடன் யுத்தத்தில் ஈடுபட முடியுமான சூழ்நிலைகள் தொடர்பில் குறிப்பிடுவதுடன்

உள்நாட்டிலோ அல்லது சர்வதேச ரீதியாகவோ இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலான வரையறைகளையும் உள்ளடக்கியுள்ளன. இத்தகைய வரையறைகள் உண்மையில் யுத்தத்தில் ஈடுபடும் மற்றும் ஈடுபடாத மக்களின் உயிர் உடமைகளை பாதுகாக்கும் நோக்கத்துடனும் ஆயுதக் குறைப்பு, கைதிகளைப் பாதுகாத்தல் மற்றும் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் போன்றவற்றையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளன (ICRC, 2014). இத்தகைய சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் 19 ஆம் நூற்றாண்டிலேயே உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அதன் உள்ளடககங்கள் மிகவும் பழமை வாய்ந்தவையாகவே உள்ளன என்று பேராசிரியர் ஹைதர் குறிப்பிடுகின்றமை இங்கு முக்கியமானதாகும் (Haider, 2013).

வரலாற்று ரீதியாக யுத்தச் செயன்முறைகளை நெறிப்படுத்துவதற்கான சட்டவிதிகள் உருவாக்கப்பட்ட வரலாற்றை குறிப்பாக எத்தகைய செயற்பாடுகளை யுத்தமொன்றின் போது மேற்கொள்ளக் கூடாது என்ற விதிமுறைகள் வரலாற்றில் எவ்வாறு வடிவமைத்துக் கொள்ளப்பட்டன என்பதை அட்டவணை 1 இல் புரிந்து கொள்ள முடியும்.

**அட்டவணை 1: யுத்தச் செயன்முறைகளை நெறிப்படுத்துவதற்கான சட்டவிதிகள் உருவாக்கப்பட்ட வரலாறு**

| வருடம் | சட்ட ஒழுங்கு | சட்டம் |
|---|---|---|
| 1863 | லைபர் சட்ட விதி | உள்நாட்டு யுத்தத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி லிங்கனினால் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட முதன் முதலாவது சட்டவிதியாகும். |
| 1864 | 1வது ஜெனிவா பிரகடனம் | யுத்தத்தில் காயமடைந்தவர்கள் தொடர்பான, அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான ஏற்பாடுகளை இது கொண்டிருந்தது. மட்டுமன்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடுநிலையான அமைப்பாகவும் இதில் பிரகடனம் பெற்றது. |
| 1874 | பிரசெல்ஸ் பிரகடனம் | யுத்தத்தில் ஈடுபடும் எதிரிப் படைகளின் மனிதத் தன்மையை காக்க வேண்டும் என்பதுடன் தேவையற்ற தாக்குதல்களை தடுக்கவும் வலியுறுத்தியது. |
| 1906 | 2வது ஜெனிவா பிரகடனம் | கடல்மார்க்க யுத்தத்தினால் பாதிக்கப்படுபவர்களை பாதுகாத்தல் பற்றிக் குறிப்பிட்டது. |
| 1919 | யுத்தங்கள் தொடர்பான ஆணைக்குழு | போர்க் குற்றங்கள் தொடர்பான விதிமுறைகளை உள்ளடக்கியது. |
| 1925 | ஜெனிவா ‘‘காஸ்’’ ஒழுங்கு | யுத்தத்தில் உயிரியல் ரீதியான ஆயுதங்களைப் பயன்படுத்துதலை தடை செய்தது. |
| 1929 | 3வது ஜெனிவா பிரகடனம் | யுத்தக் கைதிகள் பற்றிய விடயங்களை குறிப்பிட்டது. |
| 1948 | ஐக்கிய நாடுகள் சபை | இன அழிப்புக்கு எதிரான சட்டங்களை இயற்றியதுடன் தனது அங்கத்துவ நாடுகளை அதற்கு கட்டுப்படுமாறும் வலியுறுத்தியது. |

| | | |
|---|---|---|
| 1949 | 4வது ஜெனிவா பிரகடனம் | யுத்தங்களின் போது சிவிலியன்களின் உரிமைகளை பாதுகாத்தல் பற்றி கவனம் செலுத்தியது. |
| 1998 | சர்வதேசகுற்றவியல் நீதிமன்றம் | சர்வதேச அளவிலான யுத்தக் குற்றங்களை விசாரணை செய்யும் அமைப்பாக ICC உருவானது. |

மூலம்: 1863ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தொகுக்கப்பட்ட போர் தொடர்பான சர்வதேச விதிகளில் இருந்து ஆய்வாளரால் தொகுக்கப்பட்டது.

இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டுகளில் இருந்து சமகாலப் பகுதி வரை சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் எனும் பகுதி வித்தியாசமான உள்ளீடுகளைக் கொண்ட சீர்திருத்தங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது எனலாம்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் என்பது யுத்தக் காலப்பகுதியில் மாத்திரம் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் நடைமுறையாகும் விசேட சட்டங்களாகவே கருதப்படுகின்றன. அந்த வகையில் சர்வதேச அளவிலான ஆயுதப் போராட்டம் என்பது 1949 ஆம் ஆண்டு ஜெனிவாப் பிரகடனத்தின் மூன்றாவது சரத்தின் பிரகாரம் இரு நாடுகளுக்கு இடையே ஆயுத மேந்திய வகையில் நடைபெறும் யுத்தங்கள் அல்லது ஏதேனும் ஒரு அரசின் மீது மற்றொரு அரசு நிகழ்த்தும் ஆக்கிரமிப்பு யுத்தம் எனவும் வரையறை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல் அரச அந்தஸ்து பெறாத இயக்கங்கள் நிகழ்த்தும் வன்முறைப் போராட்டங்களை குறித்த பிரகடனம் சர்வதேச அளவிலான யுத்தங்களாகக் கருதுவதில்லை. உதாரணத்திற்கு இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகள், பிலிப்பைன்ஸின் இஸ்லாமிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் போராட்டங்களைக் குறிப்பிட முடியும்.

அதுமட்டுமின்றி அனைத்து தரப்பினரையும் சமமாக நடத்துவது மற்றும் பழிவாங்கல் இன்மை போன்ற முக்கியமான போர் விதிகளை சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் கொண்டுள்ளன. இது போரில் ஈடுபடும் தரப்புக்களிடையே ஆயுதப் பாவனையின் சமநிலைத் தன்மையையும் அதனூடாக தீங்கினைக் குறைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் மையக் கருக்களாக பின்வரும் இரு கருத்துக்களை குறிப்பிட முடியும் என்று கார்டம் எனும் அறிஞர் விளக்குகிறார் (Gardam, 1993).

- **சுய பாதுகாப்புக்கான உரிமையை வலியுறுத்தல்**

அரசொன்றுக்கு உள்ளக மற்றும் வெளியக ரீதியான தாக்குதல்களில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 51வது சரத்து பின்வருமாறு குறிப்பிடுகின்றது. உண்மையில் இந்த விதியானது ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையில் 2003ஆம் ஆண்டுகளில் இருந்த போர்ப் பதற்றம் கருதி கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

“ஐக்கிய நாடுகள் சபையில் (UN) அங்கம் வகிக்கும் ஏதேனும் ஒரு நாடு தாக்கப்பட்டால், அது தனியாகவோ அல்லது பிற நாடுகளின் உதவியுடனோ தன்னைத் தற்காத்துக் கொள்வதள்கான இயற்கையான உரிமை உடையது. அமைதி மற்றும் பாதுகாப்பை மீட்டெடுக்க ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் நடவடிக்கை எடுக்கும் வரை இந்த உரிமை தொடரும்”.

குறித்த இந்த விதியினை ஏதேனும் ஒரு நாடு தனக்கு சுய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலால் தான் போரைத் துவங்கப்போவதாக அறிவிக்கும் எனின் குறித்த நாடு தாக்கப்பட்டு இருப்பது தொடர்பிலான தகுந்த ஆதாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேலும் விபரித்தது. மட்டுமன்றி தனது சுய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்ட ஒரு நாடு, தனது நாட்டினுள் அமைதியையும்

சமாதானத்தையும் பேணுவதற்காக எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கை தொடர்பிலும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனிதாபிமான சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

- **இராணுவ நடவடிக்கையும் அதன் பிரயோகமும்**

போர் நடவடிக்கைகளின் போது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் குறித்து சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மிகுந்த கவனம் செலுத்துகின்றன. போரில் வெற்றி பெறுதல் தொடர்பான கரிசனைகள் எவ்வளவு இருந்த போதிலும், மனிதாபிமானத் தன்மையை வலியுறுத்தும் வகையில் குறித்த விதிகள் அமைக்கப்பட்டுள்ளமை அவற்றின் முக்கிய சிறப்பம்சமாகும். உண்மையில் சட்ட ரீதியான இராணுவ நடவடிக்கை என்பதனூடாக இங்கே நாடப்படுவது எல்லாம் ‘‘போரில் ஈடுபடும் ஒரு நாடு தனது வெற்றியை அடையும் வகையிலான சகல விதமான இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளையும் சர்வதேச மனிதாபிமான சட்ட வரையறைகளுக்குள் நின்று பிரயோகம் செய்ய முடியும்’’ என்பதையே ஆகும். இதனை 2004ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் இராணுவ ஒழுக்கங்கள் பற்றிய அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

‘‘தாம் ஈடுபடும் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது குற்றம் இல்லையென்றாலும் அந்த நாட்டின் சொந்த அப்பாவி மக்களுக்கு எவ்வித உயிர் மற்றும் உடமைப் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு அது அமைய வேண்டும்.’’ (United Kingdom Ministry of Defence, 2004).

இந்த இராணுவ விதியானது போரின் போது வேண்டுமென்றே உயிர்களையும் உடமைகளையும் எவ்வித காரணங்களுமின்றி தாக்கி அழிப்பதை குற்றமாகக் கருதுவதுடன் கொலைகளையும், தாக்குதல் நடவடிக்கைகளையும் போரின் போது அனுமதிப்பதானது நீண்ட கால யுத்தங்களுக்கான அனுமதியாக ஒருபோதும் அமையாது எனவும் வலியுறுத்துகின்றது.

### 3.1. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் யுத்த தர்மங்கள்

மிக அண்மையில் கோர்வை செய்யப்பட்ட சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் வரலாற்றுடன் ஒப்பிடுகையில் யுத்த தர்மங்கள் தொடர்பிலான இஸ்லாத்தின் பார்வையும் அதன் நியதிகளும் மிக நீண்டவையாகும். எல்லா விவரங்களிலும் நடுநிலையையும் பொறுமை, நீதி போன்ற விழுமியங்களையும் கருத்தில் கொண்ட வாழ்வியல் என்பதால் போர் விவரங்கள் தொடர்பிலும் இஸ்லாம் அதே நிலைப்பாட்டையை எடுக்கிறது. தேவையற்ற வன்முறைகளையும், கொடூரமான போர்களையும் வன்மையாகக் கண்டிக்கும் இஸ்லாம் விதிவிலக்கான போர் நிலைமைகளில் கூட நீதி, சமத்துவம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுமாறு வலியுறுத்துகிறது.

‘‘நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்கிறார்கள் நிராகரிப்பவர்கள் ஷைத்தானின் பாதையில் போர் செய்கிறார்கள் ஆகவே (மு.ஃமின்களாகிய) நீங்கள் ஷைத்தானின் நண்பர்களுக்கு எதிராகப் போர் புரியுங்கள் - நிச்சயமாக ஷைத்தானின் சூழ்ச்சி பலஹீனமானதேயாகும்.’’ (அல்குர்ஆன், 4:76).

ஒரு முஸ்லிம் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள அல்லது தனது பராமரிப்பின் கீழ் உள்ளவர்களையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்ற வகையில் பின்வரும் விடயங்களை யுத்த நடவடிக்கைகள் தொடர்பாகக் கொண்டிருக்கின்றது.

#### 3.1.1. தற்காப்பு நடவடிக்கை

அல்குர்ஆனிய வசனங்களின் பிரகாரம் தற்காப்பு என்பது கடமை என்பதுடன் சட்ட ரீதியான அந்தஸ்த்தினையும் அது கொண்டுள்ளது எனலாம். மட்டுமன்றி அடக்குமுறை மற்றும்

ஒடுக்குமுறைகளை எதிர்த்து போராடுவதை இஸ்லாம் வலியுறுத்துவதுடன் குறித்த அநீதிகள் எதிரிகளால் நிறுத்தப்படும் போது யுத்தங்களையும் அவசியம் நிறுத்தி விட வேண்டும் எனவும் இஸ்லாமிய சிந்தனைகள் வலியுறுத்தி வருகின்றன.

"போர் தொடுக்கப்பட்டோருக்கு - அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த காஃபிர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது; நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன்." (அல்குர்ஆன், 22:39) என்ற அல்குர்ஆனிய வசனம் போர் செய்தல் என்பதன் நோக்கமாக அநீதியைக் களைதல் என்பதே அமைய வேண்டும் என்கிறது. குறித்த அல்குர்ஆனிய வசனத்தை நோக்கும் போது அது முஸ்லிம்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டாலே தவிர வலிந்து யுத்தங்களில் ஈடுபட வேண்டாம் என்ற கருத்து இழையோடுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது தற்காப்புக்கான நடவடிக்கையாகவே இஸ்லாம் யுத்த அனுமதியை வழங்கியிருக்கின்றமையை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது (Shah, 2013).

மௌலானா மௌதூதி போன்ற அறிஞர்களைப் பொறுத்தவரை தற்காப்பு யுத்தங்களை இஸ்லாம் அனுமதித்ததன் இலக்குகளாக முஸ்லிம்களின் உயிர் மற்றும் உடமைகளைப் பாதுகாப்பதும் எதிரிகளின் கைகள் அதாவது அநீதியின் அதிகாரம் எழுச்சி பெறுவதைத் தடுப்பதற்குமாகும். அதேநேரம் அவரைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் பலமடைந்து விட்டனர் என்று தாங்களாகவே உணரும் போது இறையாட்சியை நிலைநாட்டுவதற்காக முஸ்லிம்கள் உழைக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார். இந்த முயற்சியானது முடிந்தளவில் சமாதானமான வழிமுறையினூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் தவிர்க்க முடியாத நேரங்களில் ஆயுதங்களையும் பயன்படுத்த முடியும் என்கிறார். அவரைப் பொறுத்தவரை அல்குர்ஆன் தற்காப்பு யுத்தங்களை கடமையாக்குவதன் இரு பிரதான இலக்குகளாக,

- தங்களையும் தமது அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொள்ளல்.
- உலகளாவிய ரீதியில் உள்ள அநீதியான கட்டமைப்புக்களைத் தகர்த்து இறையாட்சியை ஏற்படுத்துதல் ஆகியவற்றை குறிப்பிடலாம் (Mawdudi, 1996).

### 3.1.2. யுத்தங்களில் ஈடுபடுவோர் பற்றிய விதிகள்

யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்புக்கள் பற்றிய தெளிவான வழிகாட்டலை நபி முஹம்மத் (ஸல்) அவர்களது ஸுன்னாவில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

ஸஃப்வான் இப்னு அஸீஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் எங்களை ஒரு இராணுவப் படையில் அனுப்பிவிட்டு கூறினார்கள், …(இறந்த உடல்களை) சிதைக்காதீர்கள், துரோகம் செய்யாதீர்கள், யுத்த பெருமதிகளை கொள்ளையடிக்காதீர்கள், குழந்தைகளை கொல்லாதீர்கள்." (Sunan Ibn Majah, Book 24: Hadith 2857). மேலும், இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "போரில் ஒரு பெண் கொல்லப்பட்டதாக கண்டறியப்பட்டதும், அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், பெண்களையும், குழந்தைகளையும் கொள்வதைத் தடை செய்தார்கள்" (Sahih Muslim, Book 32: Hadith 1744b).

அபூ லுபாபா ஹுசைன் எனும் அறிஞர் போர்களில் பங்குகொள்ளும் வீரர்கள் தொடர்பாக இஸ்லாம் ஏழு வகையான நியதிகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார். முஸ்லிமாக இருத்தல், பருவ வயதை அடைந்திருத்தல், அறிவு முதிர்ச்சி, யுத்தத்தில் பங்கு கொள்ள மனப்பூர்வமாக சம்மதித்தல், ஆணாக இருத்தல், பெற்றோர் அனுமதி, கடனில்லாதவராக இருத்தல் ஆகியவையே அவையாகும் (Hussein, 1979). உண்மையில் குறிப்பிட்ட

விதிமுறைகளை இஸ்லாம் விதித்திருப்பதானது போர் நடவடிக்கைகளின் போதான அவசரமாக தீர்மானமெடுத்தல் மற்றும் வியூக உபாயங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை எதிர்பாத்தேயாகும். இறுதியில் போரில் வெற்றி பெறுவதை இலகுபடுத்தும் வகையிலேயே இத்தகைய போர் வீரர்கள் தொடர்பான விதிமுறைகளை இஸ்லாம் விதித்து உள்ளதைக் குறிப்பிட முடியும்.

நடைமுறையிலும் இத்தகைய நியதிகளை நபிகளார் கையாண்டு இருக்கிறார்கள் என்பதை பத்ர் களத்தினை உதாரணமாகக் கொண்டு விளக்க முடியும். ஸுபைர் இப்னு அவ்வாம், மிக்தாத் பின் அம்ர், கைஸ் பின் அபி ஸ.்.ஸாஹ் (ரழி) போன்றவர்களை நபிகளார் மிகுந்த அவதானிப்பின் பிரகாரம் நியமித்ததன் விளைவாகவே பத்ரை முஸ்லிம்களால் வெற்றி கொள்ள முடிந்தது எனலாம் (Al-Mubarakfuri, 1995).

### 3.1.3. சமாதானப் பேச்சுவார்த்தைகள்

இஸ்லாமிய புனிதப் பிரதிகளான அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை நோக்கும் போது யுத்தங்களை விடவும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பிலான ஏவல்களை அதிகம் கண்டு கொள்ள முடியும். அதாவது எல்லா சந்தர்ப்பங்களிலும் முஸ்லிம்கள் யுத்தத்தினை விட சமாதானப் பேச்சுவார்த்தைகளிலேயே தங்கியிருக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் போதனையாகும். அதாவது யுத்தம் என்பதை விதிவிலக்கானதாகவும் சமாதானம் என்பதனை விதியாகவுமே இஸ்லாம் கருதுகின்றது. மௌலானா மௌதூதி இது பற்றி குறிப்பிடும் போது சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான வெற்றிடம் காணப்படுகையில் வேண்டுமென்றே யுத்தத்தின் மீது நாட்டம் கொள்வது முஸ்லிம்களுக்கு தடுக்கப்பட்டதாகும் எனக் குறிப்பிடுகிறார் (Mawdudi, 1996). அல்குர்ஆன் இது தொடர்பாக குறிப்பிடும் போது, ''அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்து (இணங்கி) வந்தால், நீங்களும் அதன் பக்கம் சாய்வீராக! அல்லாஹ்வின் மீதே உறுதியான நம்பிக்கை வைப்பீராக - நிச்சயமாக அவன் (எல்லாவற்றையும்) செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.'' (அல்குர்ஆன், 8:61) என்கிறது.

குறித்த அல்குர்ஆனிய வசனம், இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ள யுத்த அனுமதி என்பது சமாதான முயற்சிகளுக்கே இடமற்ற நிலையில் மேற்கொள்ளப்படும் இறுதியான தீர்மானமாக அமைய வேண்டுமே தவிர, ஆரம்ப நிலையிலேயே எடுக்கப்படும் நடவடிக்கையாக இருக்கக் கூடாது என்பதைக் தெளிவுபடுத்துகிறது. இதன் பிரதிபலிப்பை இஸ்லாமிய சட்ட மரபான பிக்ஹ் பரப்பிலும் காண முடிகிறது. குறிப்பாக, மூன்றாம் தரப்பினர் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக முன்வந்தால், அதனை ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள் பிக்ஹ் இலக்கியங்களில் வகுத்துத் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நடைமுறையில், ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் செயல்பாடுகள் இதற்கான சிறந்த வரலாற்று உதாரணமாக விளங்குகின்றன. நபிகளாரின் பெயரை ''முஹம்மது ரஸூலுல்லாஹ்'' என குறிப்பிடப்பட்டிருந்ததை நீக்குமாறு கோரப்பட்டதையும், மேலும் வெளிப்படையாகவே மதீனாவின் இஸ்லாமிய அரசுக்கு பாதகமாகத் தோன்றக்கூடிய அம்சங்கள் உடன்படிக்கையில் இடம்பெற்றிருந்த போதிலும், நபிகளாரின் அணுகுமுறை முழுமையாக யுத்தத் தவிர்ப்பையும் சமாதான முயற்சிகளையும் முன்னிறுத்தியதாக இருந்ததை வரலாறு பதிவு செய்கிறது (Al-Mubarakfuri, 1995).

இவ்வுதாரணத்தின் மூலம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இஸ்லாம் வழங்கும் முன்னுரிமை மிக்க பார்வையை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

### 3.2. சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கும் இஸ்லாமிய யுத்த தர்மங்களுக்கும் இடையேயான ஒப்பீடு

சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் இஸ்லாமிய யுத்த தர்மங்களும் ஒருங்கே மனிதாபிமான அடிப்படையில் அமைந்ததும் மனித குலத்திற்கு விரோதமாக அமையாததுமான யுத்த ஒழுங்குகளையே காட்டித் தருகின்றன. இரு கோட்பாடகளும் தம்மளவில் எதிரித் தரப்பினரின் கௌரவம் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்டு இருப்பதுடன் யுத்தங்களில் நேரடியாகப் பங்கு பெறாத ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்களைக் பாதுகாப்பதிலும் மிகுந்த கவனத்தைச் செலுத்துகின்றன. அது மட்டுமன்றி, வேண்டுமென்றே உயிர்களையும் உடமைகளையும் தாக்கி அழிப்பதையும் அவை தடை செய்கின்றன.

“நீங்கள் (அவர்களுடைய) பேரீத்த மரங்களை வெட்டியதோ, அல்லது அவற்றின் வேர்களின் மீது அவை நிற்கும்படியாக விட்டு விட்டதோ அல்லாஹ்வின் அனுமதியாலும், அந்த ∴பாஸிக்குகளை(ப் பாவிகளை) அவன் இழிவு படுத்துவதற்காகவுமே தான்.” (அல்குர்ஆன், 59:5).

இவ்வாறு இரு வகையான சட்ட ஒழுங்குகளையும் பின்வருமாறு ஒப்பீடு செய்ய முடியும் (United Nations Educational, Scientific and Cultural Organization, 1954).

#### 3.2.1. யுத்தத்தினைப் பிரகடனம் செய்தல்

யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்பதை உத்தியோகபூர்வமாக அறிவிப்புச் செய்யும் நடைமுறையே யுத்தப் பிரகடனம் எனப்படுகிறது. இவ்வாறு யுத்தத்தினை வெளிப்படையாகவே உலகுக்கு அறியத் தருவதானது யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினரையும் யுத்தத்தில் ஈடுபடாத மத்தியஸ்தம் வகிக்கும் தரப்பையும் அடையாளம் கண்டு கொள்ள உதவியாக அமைகிறது என்பதால் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் இதனை தனியான விதியாகக் கொண்டுள்ளன. மட்டுமன்றி யுத்தப் பிரகடனம் என்பதை முக்கியத்துவம் வாய்ந்த யுத்த விதியாகவும் அது குறிப்பிடுகிறது (Hague Convention (III), 1907). இருந்த போதிலும் யுத்தத்தின் எதிரித் தரப்பினரை திடீரென தாக்குவதை நவீன யுத்த தர்மங்களின் பிரகாரம் சிலர் யுத்த தந்திரம் என்ற வகையில் அனுமதித்து இருக்கின்றார்கள்.

அதேபோல் இஸ்லாமிய யுத்த தர்மங்களின் பிரகாரம் யுத்தம் ஒன்றினை வெளிப்படையாக அறிவிக்காமல் நிகழ்த்துவது தடுக்கப்பட்ட ஒரு விடயமாகக் கருதப்படுகிறது. நபிகளார் இரவிலோ அல்லது பகலிலோ திடீர் தாக்குதல்களுக்கு தடை விதித்து இருந்தார்கள். எப்படியான சந்தர்ப்பங்களிலும் திடீரென தாக்குதல் கொடுப்பதை நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தடுத்து இருந்தார்கள்.

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இரவில் கைபரை அடைந்தார்கள், இரவில் எதிரிகளை அடையும் போதெல்லாம் காலை வரை அவர்களைத் தாக்காமல் இருப்பது அவருடைய பழக்கமாக இருந்தது. விடியற்காலையில் …” (Sajih al-Bukhari, Book 64: Hadith 4197).

எனவே யுத்தத்தினை பிரகடனம் செய்தல் என்பது இஸ்லாமிய மற்றும் சர்வதேச போர் விதிகளின் பிரகாரம் அழுத்தமாக வலியுறுத்தப்பட்ட ஒரு விவகாரமாகும். இங்கு இஸ்லாம், யுத்த பிரகடனம் என்பதை வலிந்து மேற்கொள்ளுமாறு பணிக்காத அதேவேளை யாரேனும் போருக்கு அழைத்தாலே ஒழிய அதனைச் தானாகவே செய்ய வேண்டாம் எனவும் படிக்கிறது. ஆனால் சர்வதேச அளவில் குறித்த நடைமுறை யார் மீதும் எப்போது வேண்டுமானாலும் யுத்தப் பிரகடனம் செய்ய முடியும் என்பதே சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் நடைமுறையாகக் காணப்படுகின்றது.

### 3.2.2. சிவிலியன்கள் மற்றும் யுத்தத்தில் ஈடுபடாதோர் மீதான பாதுகாப்பு

இஸ்லாமிய யுத்த தர்மங்களின் பிரகாரம் பகையுணர்வு என்பது யுத்தக் களத்தில் மாத்திரமே இருக்க வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது. யுத்த களத்தில் இல்லாமல் காணுகின்ற இடங்களில் எல்லாம் போர் புரிவதை இஸ்லாம் தடுத்துள்ளது. அதேபோல் குழந்தைகள், வயோதிபர்கள், சிறார்கள், பெண்கள், மதகுருமார்கள், யுத்தத்தில் மருந்து இடுகின்ற செவிலியர்கள், ஆயுதங்களைப் பொறுக்கி வைப்பவர்கள் என்று நேரடியாக தாக்குதல்களில் ஈடுபடாத தரப்பினரை கொலை செய்வதோ அல்லது அவர்களுக்கு ஏதேனும் ஒருவகையில் குந்தகம் விளைவிப்பதையோ இஸ்லாம் தடுத்துள்ளது. இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. “உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள் ஆனால் வரம்பு மீறாதீர்கள் நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை.” (அல்குர்ஆன், 2:190).

சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் அடிப்படையிலும் யுத்தத்தில் ஈடுபடாத பொதுமக்களையோ, நேரடியான தலையீடுகளை மேற்கொள்ளாத சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் பெண்கள் மீதோ தாக்குதல்களை நிகழ்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் கூட நடைமுறையில் பாலஸ்தீன், யுக்ரைன், இலங்கை, மியன்மார், எமன், சிரியா போன்ற நாடுகளில் சர்வதேச விதிகளையும் மீறும் விதத்திலும் அவற்றைப் பலவீனப்படுத்தும் விதத்திலும் ஏகாதிபத்திய நாடுகளுடன் இணைந்து அரசுகள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருவகையான சட்டங்களையும் நோக்கும் போதும் சிவிலியன்களையும் ஏனைய அப்பாவி மக்களையும் பாதுகாப்பதையே கருத்தில் கொள்கின்றன என்ற போதும் யுத்தம் நடைபெறும் முறைகளில் ஏற்பட்ட முறைமை மாற்றங்களின் விளைவால் யுத்தங்களின் போது பொதுமக்கள் வெகுவாகக் கொல்லப்படும் நிலையே யதார்த்தமாகி விட்டது. ஆரம்பகாலங்களில் குடிப் பிரதேசங்களுக்கு வெகு தூரத்தில் அணி திரண்டு குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம் போர் இடம்பெற்றமையால் பொதுமக்கள் கொல்லப்படுவது அரிதாகவே இடம்பெற்றது. ஆனால் சமகாலத்தில் போர்ச் செயன்முறைகள் பரவலான நிலப்பரப்பில் இடம்பெறுவதால் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

### 3.2.3. அதிக ஆபத்தான ஆயுதப் பாவனை

உயிரியல் ஆயுதங்கள் போன்ற ஒரு தலைமுறையையே சின்னாபின்னமாக்கி விடும் வகையிலான யுத்த ஆயுங்களை பிரயோகம் செய்வது தொடர்பாக இஸ்லாமிய யுத்த தர்மங்களும், சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் விதிமுறைகளைக் கொண்டிருக்கின்றன. இஸ்லாமிய யுத்த நெறிகளின் படி யுத்தத்தில் ஈடுபடும் எதிரி நாட்டு இராணுவத்திற்கோ அல்லது அவர்களுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்களுக்கோ நஞ்சூட்டுவதை நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தடை விதித்து இருந்தார்கள். குறித்த இந்த நடைமுறையைக் கொண்டுதான் சமகால அறிஞர்கள் பலர் நிலக் கண்ணிவெடிகள் வைப்பதனையும், உயிர் இரசாயன ஆயுதங்களை பிரயோகம் செய்வதையும் தடை செய்திருக்கின்றார்கள். அதேபோல் யுத்தங்களின் போது மனிதர்களை பாதுகாப்புக் கேடயமாகப் பயன்படுத்தி போரிடுவதையும் இஸ்லாம் தடை செய்திருக்கிறது.

“இதன் காரணமாகவே, ‘நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான்; மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்’ என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள்; இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்.” (அல்குர்ஆன், 5:32) என்ற

அல்குர்ஆன் வசனத்தை அறிஞர்கள் ஆதாரமாகக் கொள்கிறார்கள். அதேபோல் சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் யுத்தத்தில் மனித குலம் விரோதமாக அமையும் ஆயுதப் பாவனையினை சட்ட விரோதமாகவும் யுத்தக் குற்றங்களாகவும் அறிவித்து இருக்கின்றன. 1945இல் இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கவினால் ஜப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டு பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்ததனைத் தொடர்ந்தே உயிர் இரசாயன ஆயுதங்களின் மீது உலகின் கவனம் திரும்பியது எனலாம். அதேபோல் போரில் ஈடுபடும் ஒரு நாடு, தனதே எதிரி நாட்டு இராணுவத் தளங்களை தாக்கி அழிப்பதையே இலக்காகக் கொண்டிருக்க வேண்டும் என்று 1949 ஆம் ஆண்டின் 4 ஆவது ஜெனிவா பிரகடனம் மூலமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அதேபோல் இரவில் தாக்குதல் நடாத்துவதற்கு ஒரு நாட்டிற்கு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் அனுமதியை வழங்குகின்றன. அதாவது வேண்டுமென்றே இராணுவத் தளங்களை மாத்திரமின்றி தனது எதிரி நாட்டின் பொதுமக்களை இலக்காகக் கொண்டு நிகழ்த்தப்படும் எந்தவிதமான தாக்குதல்களையும் குறித்த சட்டங்கள் மூலம் அதாவது 1949ஆம் ஆண்டின் 4வது ஜெனிவா பிரகடனம் மூலமாக தடை செய்து இருக்கின்றன.

ஆபத்தான ஆயுதப் பாவனை தொடர்பாக சர்வதேச சட்டங்கள் பேசியிருந்த போதிலும் உலகளவில் வல்லரசு நாடுகள் பல தமது ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட நாடுகளில் உயிர் இரசாயன ஆயுதங்களை அதிகம் பிரயோகித்து வருகின்றன (TASS, 2024). ஆனாலும் இதுதொடர்பான எந்தவொரு பொறுப்புக்கூறலும் இதுவரை இத்தகைய சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கதாகும்.

#### 3.2.4. யுத்தக் கைதிகள் பற்றிய நெறிமுறைகள்

இஸ்லாமிய யுத்த நெறிகளின் பிரகாரம் யுத்தத்தின் போது பிடிபடும் கைதிகளின் விடயம் தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவர்களைத் தமது சக மனிதர்களாகக் கருத்துமாறு இஸ்லாம் பணித்துள்ளதுடன் அவர்களது சுய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தாத வகையில் நடந்து கொள்ளுமாறும் வலியுறுத்தி இருக்கிறது. உணவு, உடை மற்றும் ஆகாரம் போன்றவற்றை வழங்குமாறும் தேவையான மருத்துவ வசதிகளையும் வழங்குமாறும் இஸ்லாமிய யுத்த நெறிகள் போதனை செய்கின்றன. அல்குர்ஆன் இது தொடர்பாக வெவ்வேறு இடங்களில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"மேலும், அ(வ்விறை)வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள்." (அல்குர்ஆன், 76:8).

"…அதன் பிறகு யாதொரு ஈடுபெற்றோ அல்லது (ஈடு பெறாது) உபகாரமாகவோ அவர்களை விட்டு விடுங்கள் …" (அல்குர்ஆன், 5:32).

"(விஷமங்கள் அடங்க) பூமியில் இரத்தத்தை ஓட்டாத வரையில் (விரோதிகளை உயிருடன்) சிறைபிடிப்பது எந்த நபிக்கும் தகுதியில்லை; நீங்கள் இவ்வுலகத்தின் (நிலையில்லா) பொருள்களை விரும்புகிறீர்கள். அல்லாஹ்வோ மறுமையில் (உங்கள் நலத்தை) நாடுகிறான். அல்லாஹ் (ஆற்றலில்) மிகைத்தோனும், ஞானமுடையோனாகவும் இருக்கின்றான்." (அல்குர்ஆன், 8:67).

அதேபோல் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடைமுறையில் கைதிகளுடனான நடைமுறைகள் தொடர்பான முன்மாதிரிகளையும் நபிகளார் வழங்கி இருக்கிறார்கள். குறிப்பாக ஹுனைன் மற்றும் பத்ர் போராட்டங்களின் போது முறையே நல்லெண்ண அடிப்படையில் ஹவாசின் குல வீரர்களை எவ்வித கப்பமும் இன்றி விடுதலை செய்ததுடன், பத்ர் போரில் பிடிபட்ட கைதிகளையும் கல்வி எனும் கப்பத்தைக் கொண்டு விடுதலை செய்தார்கள். இதனை Ramadan (2007),

குறிப்பிடுகையில் பத்ர் போரின் முடிவில் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிடிபட்டு இருந்த கைதிகளிடம் இருந்து அவர்களது விடுதலைக்கான பிணையாக கல்வியையும் ஈட்டுத் தொகையையும் பிரகடனம் செய்து இருந்தார்கள். ஈட்டுத் தொகையைக் கொடுக்க இயலாத கைதிகள் எழுத, படிக்கத் தெரியாத மதீனாவைச் சேர்ந்த பத்து சிறுவர்களுக்கு எழுத, படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. சிறுவர்கள் நன்றாகக் கற்றுக் கொண்டதும் அக்கைதிகளுக்கு விடுதலை வழங்கப்படுமென்றும் வாக்குறுதி அறிவிக்கப்பட்டது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களைப் பொறுத்தவரையிலும் யுத்தக் கைதிகளைச் சித்திரவதை செய்வதையும் அவர்களை மனிதாய நீக்கம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவதையும் போர்க் குற்றங்களாக பிரகடனம் செய்து இருக்கின்றன. 1929 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஜெனிவாச் சட்டம் இது தொடர்பாக குறிப்பிடுகிறது. பிடிபடும் யுத்தக் கைதிகளை கால தாமதமின்றி விடுதலை செய்தல் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக அவர்கள் மீது கரிசனை செலுத்துதல் மற்றும் கொலை செய்தல் போன்றவை குறித்த ஆவணத்தில் போர்க் குற்றங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. அம்னஸ்ட்டி இன்டர்நெஷனல், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு, உண்மைகளைக் கண்டறியும் சர்வதேச ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் போன்றன சர்வதேச ரீதியில் இடம்பெறும் யுத்தக் கைதிகளின் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்காணிக்கும் சர்வதேச அமைப்புக்களாகச் செயற்பட்டு வருகின்றன. ஆனால் இதில் உள்ள மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால் சர்வதேச ரீதியான ஆயுதப் போராட்டங்களுக்கான விதிகளாக மாத்திரமே குறித்த ஒழுங்கு முறைகளை சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் வகுத்திருக்கின்றன. உள்நாட்டு ஆயுதப் போராட்டங்களுக்கு இதே விதிகளை அவை விருத்தி செய்யவில்லை என்பது இதன் பிரதான குறைபாடாகும். ஆனால் இஸ்லாமிய யுத்த நெறிமுறைகளின் பிரகாரம் கைதிகள் தொடர்பான விதிமுறைகள் இடம் மற்றும் காலப் பரிமாணங்களுக்குள் உட்பட்ட விடயமல்ல. மாறாக அவற்றினை மாறாத விழுமியங்களாகவே இஸ்லாம் முன்னிறுத்தி இருக்கிறது.

### 3.2.5. மனித கண்ணியத்தைப் பாதுகாத்தல்.

சாதாரண பொதுவாழ்வில் ஒவ்வொரு மனிதனினதும் கண்ணியத்தை புரிந்து அதனை ஏற்றுக் கொள்வதை வலியுறுத்தி இருக்கும் இஸ்லாமிய சிந்தனை போர்க் காலங்களில் விதிவிலக்கான ஒன்றாக அதனைக் கருதவில்லை. அல்குர்ஆனிய சிந்தனையின் பிரகாரம் இஸ்லாத்தின் இத்தகைய அம்சங்கள் தொடர்பாக நிலையான மற்றும் மாறாக விழுமியங்கள் என்று குறிப்பிடுகிறார் பேராசிரியர் தாரிக் ரமழான் (Ramadan, 2008) சொல்லப்போனால் இஸ்லாம் கூறும் போர் நெறிமுறைகளின் மையக் கருவாக இதனைக் குறிப்பிட முடியும்.

“நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம்; இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம்.” (அல்குர்ஆன், 17:70).

என்று முஸ்லிம் சமூகத்தினை மாத்திரமின்றி பொது மனித சமூகத்தினையே கண்ணிடப்படுத்தி இருப்பதாகக் அல்குர்ஆன் விளக்குகிறது. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் ஸுன்னாவின் ஒளியில் இதனைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் போரின் போது எதிரியின் முகத்தில் அறைவதை நபிகளார் தடுத்த சம்பவமொன்று வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “உங்களில் எவரேனும் ஒருவரை அடித்தால், அவர் முகத்தில் அடிப்பதைத் தவிர்க்க வேண்டும்’ என்று நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.” (Sunan Abi Dawud, Book 40: Hadith 4493).

அதுமட்டுமின்றி மனிதன் உயிருடன் உள்ளபோது செலுத்தப்படும் அதே மனித கண்ணியத்தை அவன் உயிரோடு இல்லாத போதும் வழங்க வேண்டும் என்று நபிகளாரின் வழிகாட்டல் அமைகிறது.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் எங்களை ஒரு தூது (அதாவது, ஒரு இராணுவப் பிரிவு) அனுப்பி, "…நாங்கள் புறப்பட எண்ணிய போது, அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், நெருப்பில் தண்டிப்பது அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை…" என்று கூறினார்கள்." (Sahih al-Bukhari, Book 56: Hadith 3016).

அதேபோல சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களிலும் மனித கண்ணியத்தையும் சுயமரியாதையையும் பாதுகாத்தல் என்பதை தமது பிரதான உள்ளடக்கங்களில் ஒன்றாகக் கொண்டுள்ளன. போர்க்களத்தில் வெற்றியை அடைவது எவ்வளவு முக்கியமோ அந்தளவு முக்கியம் வாய்ந்த ஒன்றாக மனித கண்ணியத்தையும் கௌரவத்தையும் அளித்தல் என்பதும் காணப்பட வேண்டும் என்று சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் தெளிவுபடுத்துகின்றன. அதேநேரம் இராணுவ நடவடிக்கைகளின் போது கட்டாயம் பின்பற்றப்பட வேண்டிய அம்சங்களில் ஒன்றாக அதனை குறிப்பிடுவதன் மனித கண்ணியத்திற்கு குந்தகம் விளைவிக்காத வரையிலேயே எந்தவொரு இராணுவ நடவடிக்கையும் சட்டத் தன்மை கொண்டதாக கருதப்படும் எனவும் சர்வதேச சட்டங்கள் விளக்குகின்றன (Hague Convention IV, 1907).

குறித்த பிரகடனத்தின் ஊடாக இராணுவ ரீதியிலான நலன்களுக்காக வேண்டி போகின்ற போக்கில் மனித உயிர்களை துச்சமாகக் கருதுவதும் போர் வெற்றிக்காக வேண்டி எந்த எல்லைக்கும் சென்று இராணு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் முற்றிலுமாக தடைசெய்யப்பட்டதாக கருதப்படுகிறது. இருவகையான சட்டங்களும் மனித கண்ணியம் மற்றும் கௌரவத்தை, பாதுகாப்பை போர் தொடர்பான தமது கோட்பாடுகளாக கொண்டிருந்தாலும் நடைமுறையில் சமகால இஸ்லாமிய அரசுகளோ அல்லது ஏனைய நாடுகளோ பின்பற்றுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சவூதி அரேபியா, பாகிஸ்தான், ஈரான் போன்ற முஸ்லிம் நாடுகளாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் நாடுகள் கூட குறைந்த பட்ச மனித கண்ணியத்தை பாதுகாக்கும் கடமையில் இருந்து வெளியேறி விடுகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது (Al Jazeera, 2022).

## 4. முடிவுரை

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் இஸ்லாமிய யுத்தத் தர்மங்கள் இடையே உள்ள ஒற்றுமைகள், வேறுபாடுகளை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்ந்து, போரின்போது மனித உரிமைகளை பாதுகாக்கும் வழிகளை வெளிப்படுத்துவதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில், இரண்டிலும் மக்களின் பாதுகாப்பு, போர் நடைமுறைகளில் ஒழுங்குமுறை, மற்றும் தேவையற்ற அழிவுகளைத் தவிர்த்தல் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன என்பது தெளிவாகிறது. சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், அரசுகள் மற்றும் ஆயுதக் குழுக்களால் ஏற்கப்படும் சட்டரீதியான விதிமுறைகளை கொண்டிருப்பதுடன், இஸ்லாமிய யுத்தத் தர்மங்கள், அல்குர்ஆன், ஹதீஸ் (அஸ்ஸுன்னா), ஷரீஆவின் அடிப்படையில் அமைந்துள்ளன. நவீன காலப் போர்களில் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மேம்படுத்த, இஸ்லாமிய யுத்தத் தர்மங்களை சர்வதேச சட்டங்களுடன் இணைந்து புரிந்துகொள்வது அவசியமானதாகும். இதன் அடிப்படையில், போரின்போது மனித உரிமைகளை உறுதியாகக் காப்பது, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது, மற்றும் யுத்த நெறிமுறைகளை பின்பற்றுதல் ஆகியவற்றில் சர்வதேச சமூகம் மற்றும் இஸ்லாமிய உலகம் இணைந்து செயல்பட வேண்டும். இந்த ஆய்வு, மக்கள் நலன் கருதி இரு சட்டங்களின் ஒற்றுமைகளைப் பயன்படுத்தி புதிய வழிகாட்டல்களை உருவாக்குவதற்கான அடிப்படையாக அமையும்.

## 5. பரிந்துரைகள்

- சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் இஸ்லாமிய யுத்தத் தர்மங்கள் ஆகியவற்றிற்கு இடையிலான ஒற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய முறையில் பொருத்தமான சட்ட வடிவமைப்பை உருவாக்கல்.
- சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் இஸ்லாமிய யுத்த தர்மங்கள் தொடர்பிலான அறிவுஜீவித்துவ உரையாடல்களை வலுப்படுத்திக் கொள்வதுடன் இரு தரப்பினரும் உடன்படக்கூடிய பொதுவான தளங்களை இனங்கண்டு, இரு சட்ட ஒழுங்கமைப்புக்களுக்கும் இடையிலான இடவெளிகளைக் குறைக்க முயற்சித்தல்.
- போர்களில் மக்கள் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களை மேலும் வலுப்படுத்த, சமகால மற்றும் வரலாற்றுப் பார்வைகளுடன் கூடிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- இராணுவப் படைகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரை மையப்படுத்தியவாறு IHL மற்றும் இஸ்லாமிய யுத்தக் தர்மங்கள் ஆகிய இரு சட்டக் கட்டமைப்புக்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் அமைந்த பாடத்திட்டங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல்.
- சமகாலச் சூழமைவுக்கு ஏற்ற விதத்தில் அமைவதும், மகாஷிதுஷ் ஷரீஆவினை கவனத்தில் கொண்டதுமான அமைப்பில் உள்ளதுமான முறைமையொன்றின் தேவை தொடர்பில் இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்கள் மற்றும் நியாயாதிக்கத் துறைசார் அறிஞர்கள் கவனம் செலுத்துதல்.
- முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் IHL மற்றும் இஸ்லாமிய மனிதாபிமான நெறிகளுக்கு இடையிலான முரண்களைச் சமரசப்படுத்தும் சட்டகங்களை உருவாக்க முயல்வதோடு அவற்றினூடாக நடைமுறைச் சாத்தியமான சட்டங்களையும் உருவாக்க முனைதல்.
- இஸ்லாமிய ஆதாரப் பிரதிகள் கொண்டிருக்கும் போர் தொடர்பான வசனங்களை வாக்கியவாத அணுகுமுறைகளுக்குள்ளால் நின்று வியாக்கியானம் செய்யும் போக்குக்கு எதிரான கதையாடல்களை வலுப்படுத்திக் கொள்வதுடன் மாறாத மனித விழுமியங்களை நிலைநாட்டுவதில் அவை செலுத்தும் கரிசனங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல்.
- IHL மற்றும் இஸ்லாமிய யுத்த நெறிமுறைகள் தொடர்பான ஒப்பியல் ஆய்வுகளையும் ஏனைய கல்வியியல் ரீதியான செயன்முறைகளையும் முன்கொண்டு செல்வதன் ஊடாக சமகாலப் பூகோள அச்சுறுத்தல்களாக உள்ள சைபர் யுத்தம், ஆயுதம் தாங்கிய ட்ரோன்கள் போன்றவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வதனை சாத்தியப்படுத்தல்.
- போர்க்குறித்த சட்டவியல் நெறிமுறைகள் மற்றும் மனிதாபிமான விதிகள் பற்றிய விழிப்புணர்வை பல்வேறு சமூகக் குழுக்களுக்கும் (அரசுகள், ஆயுதக் குழுக்கள், பொதுமக்கள்) ஏற்படுத்துதல்.

### உசாத்துணைகள்


Al Jazeera. (2022, March 12). *Dozens of children killed, maimed in Yemen in two months: UNICEF*. https://www.aljazeera.com/news/2022/3/12/47-children-killed-maimed-in-yemen-in-two-months-says-unicef

Al-Ghazali, A. H. (2008). *The revival of the religious sciences (Ihya' Ulum al-Din)*. Islamic Book Trust.

Al-Mubarakpuri, S. R. (1995). *Al-Rahiq al-makhtum: Bahth fi al-sirah al-nabawiyah ‘ala sahibiha afdal al-alah wa al-aalam*. Dar al-Arqam.

Al-Shafi'i, M. (2011). *The epistle on legal theory (Risala)* (J. Lowry, Trans.). New York University Press.

*Convention (III) relative to the opening of hostilities*. October 18, 1907. https://ihl-databases.icrc.org/en/ihl-treaties/hague-conv-iii-1907

*Convention (IV) respecting the laws and customs of war on land and its annex: Regulations concerning the laws and customs of war on land*. October 18, 1907. https://ihl-databases.icrc.org/en/ihl-treaties/hague-conv-iv-1907

*Convention (IV) relative to the protection of civilian persons in time of war*. August 12, 1949. https://ihl-databases.icrc.org/en/ihl-treaties/gciv-1949

*Convention for the protection of cultural property in the event of armed conflict*. May 14, 1954. https://www.unesco.org/en/legal-affairs/convention-protection-cultural-property-event-armed-conflict

Fleck, D. (Ed.). (2013). *The handbook of international humanitarian law* (3rd ed.). Oxford University Press.

Gardam, J. G. (1993). Proportionality and force in international law. *American Journal of International Law*, *87*(3), 391–413. https://doi.org/10.2307/2203650

Haider, H. (2013). *International legal frameworks for humanitarian action: Topic guide*. Governance and Social Development Resource Centre, University of Birmingham. https://gsdrc.org/topic-guides/international-legal-frameworks-for-humanitarian-action/

Hussein, A. L. (1979). *Al-Islam wa al-harb (Islam and warfare)*. Dar al-Liwa Publishers.

Ibn Qayyim al-Jawziyya. (2010). *Healing with the medicine of the Prophet* (P. Johnstone, Trans.). Darussalam.

Ibn Taymiyyah. (2001). *Public duties in Islam: The institution of the Hisba* (M. Holland, Trans.). Islamic Foundation.

International Committee of the Red Cross. (2014). *International humanitarian law: Answers to your questions*. https://www.icrc.org/en/publication/0703-international-humanitarian-law-answers-your-questions

Mawdudi, S. A. A. (1996). *Al-Jihad fil-Islam (Jihad in Islam)*. Muassasat Al-Risala.

Pälten, M. (2004). *Humanitarian law and armed conflicts*. Oxford University Press.

Pictet, J. (1985). *Development and principles of international humanitarian law*. Martinus Nijhoff Publishers.

Ramadan, T. (2007). *The messenger: The meanings of the life of Muhammad*. Allen Lane.

Ramadan, T. (2008). *Radical reform: Islamic ethics and liberation*. Oxford University Press.


Shah, N. A. (2013). The use of force under Islamic law. *European Journal of International Law*, *24*(1), 343–365. https://doi.org/10.1093/ejil/chs084


Soeyer, W. (2019). *International humanitarian law: Protecting human rights during armed conflicts*. Oxford University Press.

TASS. (2024, December 24). *US ramping up biological warfare presence in Africa — Russia's top brass*. https://tass.com/defense/1892353

United Kingdom Ministry of Defence. (2004). *The manual of the law of armed conflict*. Oxford University Press.

பின்னிணைப்பு: **A**





**புகைப்படம் 1:** இந்தப் படம், 1864ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட முதல் ஜெனீவா உடன்படிக்கையின் அசல் ஆவணத்தை வெளிப்படுத்துகிறது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டம் (International Humanitarian Law - IHL) என்பது ஆயுத மோதல்களின் சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆயுத மோதல்களால் ஏற்படும் பாதிப்புகளை மனிதாபிமான அடிப்படையில் கட்டுப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். போர்களில் நேரடியாகப் பங்கேற்காத நபர்களையும், இனிமேல் பங்கேற்க இயலாத நிலையிலுள்ளவர்களையும் பாதுகாப்பதோடு, போர் நடத்தப்படும் வழிமுறைகள் மற்றும் முறைகளுக்கும் இது வரையறைகளை விதிக்கிறது.

## முதன்மை ஆதாரங்கள்

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மையக் கூறுகள் 1949ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளில் அடங்கியுள்ளன. இவை உலகளாவிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முக்கியமான சர்வதேச உடன்படிக்கைகளாகும். இவற்றுடன் 1977ஆம் ஆண்டின் கூடுதல் நெறிமுறைகள் (மற்றும் சின்னங்களைப் பற்றிய மூன்றாவது நெறிமுறை - 2005) இணைக்கப்பட்டுள்ளன. மேலும், வழக்காற்றுச் சர்வதேசச் சட்டம் மற்றும் போர் நடத்தும் முறைகள் குறித்த ஹேக் உடன்படிக்கைகள் போன்ற பிற உடன்படிக்கைகளாலும் இச்சட்டம் வளப்படுத்தப்பட்டுள்ளது.

### 1949ஆம் ஆண்டின் நான்கு ஜெனீவா உடன்படிக்கைகள்

1. **முதல் ஜெனீவா உடன்படிக்கை** - நிலப்பரப்பில் காயமடைந்த மற்றும் நோயுற்ற ஆயுதப்படை உறுப்பினர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவ வசதிகளைப் பாதுகாக்கிறது.
2. **இரண்டாவது ஜெனீவா உடன்படிக்கை** - கடலில் காயமடைந்த, நோயுற்ற மற்றும் கப்பல் விபத்தில் சிக்கிய ஆயுதப்படை உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை விரிவுபடுத்துகிறது.
3. **மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கை** - போர் கைதிகள் (POWs) குறித்த நடத்தைக் கோட்பாடுகளை வகுத்து, மனிதாபிமான நடத்தை, சித்திரவதைத் தடை, உணவு, மருத்துவ உதவி மற்றும் தொடர்பு உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது.
4. **நான்காவது ஜெனீவா உடன்படிக்கை** - போர் காலங்களில் பொதுமக்களுக்கு விரிவான பாதுகாப்பை வழங்குவதோடு, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நாடுகடத்தல், கூட்டுத் தண்டனை மற்றும் பிணைக் கைதிகளை எடுப்பதைத் தடை செய்கிறது.

இந்த நான்கு உடன்படிக்கைகளும் பொதுவான பிரிவு 3 என்பதைக் கொண்டுள்ளன. இது உள்நாட்டுப் போர்கள் போன்ற அனைத்துலகமற்ற ஆயுத மோதல்களிலும் குறைந்தபட்ச மனிதாபிமான தரநிலைகள் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

### உடன்படிக்கைகளின் முக்கிய ஏற்பாடுகள்

- போரில் பங்கேற்காத நபர்கள் (காயமடைந்தோர், நோயுற்றோர், கப்பல் விபத்தில் சிக்கியோர், போர் கைதிகள் மற்றும் பொதுமக்கள்) பாதுகாப்பு பெறுதல்,
- காயமடைந்தோர் மற்றும் உயிரிழந்தோரைத் தேடி சேகரிக்கும் கடமை,
- மருத்துவப் பணியாளர்கள், போக்குவரத்து வசதிகள் மற்றும் செஞ்சிலுவை, செஞ்சந்திரன், செஞ்சுருள் போன்ற தனித்துவச் சின்னங்களை மதித்து பாதுகாத்தல்,
- வேண்டுமென்றே கொலை செய்தல், சித்திரவதை செய்தல், பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துதல் போன்ற கடுமையான மீறல்கள் (போர்க்குற்றங்கள்) தடைசெய்தல்,
- எல்லா சூழ்நிலைகளிலும் உடன்படிக்கைகளை மதித்து, பிறராலும் அவற்றை மதிக்கச் செய்வது (பொதுவான பிரிவு 1) ஆகியவை இதில் அடங்குகின்றன.

### சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள்

இந்தச் சட்டம் சில அடிப்படைக் கொள்கைகளின் மீது தங்கியுள்ளது:

- வேறுபாடு காணுதல் (Distinction) - போர்புரிவோர் மற்றும் பொதுமக்கள், இராணுவ இலக்குகள் மற்றும் குடிமைப் பொருள்கள் ஆகியவற்றுக்கு இடையே தெளிவான வேறுபாடு காணப்பட வேண்டும்.
- விகிதாசாரம் (Proportionality) - எதிர்பார்க்கப்படும் பொதுமக்கள் பாதிப்பு, எதிர்பார்க்கப்படும் இராணுவ நன்மையைவிட அதிகமாக இருக்கக் கூடாது.

- இராணுவத் தேவை (Military Necessity) - சட்டபூர்வமான இராணுவ நோக்கை அடையத் தேவையான அளவிற்கு மட்டுமே பலம் பயன்படுத்தப்பட வேண்டும்.
- மனிதாபிமானம் / தேவையற்ற துன்பத்தின் தடை (Humanity / Prohibition of Unnecessary Suffering) - அதிகப்படியான காயம் அல்லது தேவையற்ற துன்பத்தை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் முறைகள் தடை செய்யப்படுகின்றன.
- முன்னெச்சரிக்கை (Precaution) - பொதுமக்கள் பாதுகாப்பிற்காக தாக்குதல்களைத் திட்டமிடுவதிலும் செயல்படுத்துவதிலும் சாத்தியமான முன்னெச்சரிக்கைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
- பாகுபாடின்மை (Non-Discrimination) - இனம், மதம், மொழி போன்ற அடிப்படைகளில் பாதுகாக்கப்பட்ட நபர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டக் கூடாது.

இக்கொள்கைகள், இராணுவத் தேவைகளுக்கும் மனிதாபிமானப் பாதுகாப்பிற்கும் இடையே சமநிலையை உருவாக்குகின்றன. இவை அனைத்துலக மற்றும் அனைத்துலகமற்ற ஆயுத மோதல்களிலும் பொருந்தும். இக்கொள்கைகளை மீறுதல் போர்க்குற்றங்களாகக் கருதப்பட்டு, சர்வதேச அளவில் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படலாம்.